பக்கங்கள்: எட்டு

Registered as a News Paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# வலம்புரி
VALAMPURI

நாளுக்கு நாள் மாறும்
நவ நாகரிக
ஆடை வகைகளுக்கு :
காவேரி
பட்டுச் சோலை
48, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்
T. P 2333

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 1 ஞாயிற்றுக்கிழமை (16-12-2001) தொலைபேசி: 3378 ஒலி 361

## பாஸ்கரலிங்கம் விரைவில் கொழும்பு வருவார்!

(கொழும்பு)

புதிய அமைச்சரவையில் முக்கிய அமைச்சு ஒன்றின் செயலாளராக முன்னாள் திறைசேரிச் செயலாளர் கே. பாஸ்கரலிங்கம் நியமிக்கப்படவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சியின் போது, திறைசேரிச் செயலாளராக பதவிவகித்த இவர் பிரேமதாசாவின் படுகொலைக்குப் பின்னர் பல குற்றச்சாட்டுகள், சர்ச்சைகளை எதிர் நோக்கியதன் காரணமாக லண்டனுக்குச் சென்று அங்கு தங்கியிருந்தார்.

இவர் லண்டனில் இருந்து விரைவில் இலங்கை வரவிருப்பதாகவும் தெரியவருகிறது. [இ]

## நத்தார்பண்டிகைக்கு முன்னதாக யுத்தநிறுத்த அறிவிப்பு வெளிவரும்?

(கொழும்பு)

எதிர்வரும் கிறிஸ்மஸ்தினத்துக்கு முன்னர் அரசாங்கம் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தமொன்றை அறிவிக்குமென்று ஐக்கிய தேசிய முன்னணியை மேற்கோள் காட்டி கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள இந்திய விஜயத்துக்கு முன்னர் இவ் யுத்த நிறுத்த அறிவிப்பு வெளியாகுமென்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இதேமாதம் 24ந்திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் தமது சமாதான

(8ம் பக்கம் பார்க்க)

### தேசிய அரசு அமையும் வாய்ப்பு

# ரணிலின் அழைப்பிற்கு எம். பிகள் பலர் ஆதரவு!

### பொ. ஜ. முன்னணிக்குள் கருத்து முரண்பாடு

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைத்து அதன் மூலம் ஒன்று சேர்ந்து நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் விடுக்கப்பட்ட அழைப்பிற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் முக்கிய அமைச்சர்கள் உட்பட 23 பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றினை அமைத்து அதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்க, பொது ஜன ஐக்கிய முன்னணியின் 23 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர்

தேசிய அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர்கள் ஏ.எச்.எம் பௌஸி, ரிட்சர்ட்பத்திரனா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் உட்பட சுமார் 23 எம்பீக்கள் ரணில் விக்கிரம

(→ 8ஆம் பக்கம் பார்க்க)

## பட்டி வீரக்கோன் மேன் முறையீடு

(கொழும்பு)

தேசியப் பட்டியலில் சமசமாஜக்கட்சி உறுப்பினர் ஒருவரை பொ.ஜ.ஐ. முன்னணி நியமிக்காததை ஆட்சேபித்து அக்கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுமீதான விசாரணை ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இது தொடர்பான மேலதிக விளக்கங்கள் சட்டமா அதிபரிடமிருந்து கோரப்பட்டுள்ளன. பொ. ஐ. மு கட்சி

→ (8ஆம் பக்கம் பார்க்க)

## அனுருத்தவின் கொழும்பு வீடு பொலிஸாரால் திடீர் சோதனை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் ரத்வத்தையின் கொழும்பு இல்லம் நேற்று இரகசியப் பொலிஸாரால் திடீர்சோதனைக்குட்படுத்தப்பட்டது.

தேர்தல் தினத்தன்று கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவே அனுருத்த ரத்வத்தையின் இல்லம் சோதனையிடப்பட்டதாகவும் அப்போது சந்தேகத்திற்கிடமான தடயப் பொருட்கள் எதுவும் அகப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் கண்டியில் உள்ள அவரது வீடும் இரகசியப் பொலிஸாரால் சோதனையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [வ

## புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத்

## தமிழ்க்கட்சி கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின்

வித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றினை அமைத்து அதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்க, பொது ஜன ஐக்கிய முன்னணியின் 23 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர்

தேசிய அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் அமைச்சர்கள் ஏ.எச்.எம் பௌஸி, ரிச்சர்ட்பத்திரனா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் உட்பட சுமார் 23 எம்பிக்கள் ரணில் விக்கிரம

(→ 8ஆம் பக்கம் பார்க்க)

வத்தையின கொழும்பு இல்லம் நேற்று இரகசியப் பொலிஸாரால திடீர்சோதனைக்குட்படுத்தப்பட்டது.

தேர்தல் தினத்தன்று கண்டி மாவட்டத்தில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகவே அனுருத்த ரத்வத்தையப் பொருட்கள் எதுவும் அகப்பட வில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் கண்டியில் உள்ள அவரது வீடும் இரகசியப் பொலிஸாரால் சோதனையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

[வ

# புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் வன்னிசென்றுபுலிகளுடன்பேசுவார்?

[கொழும்பு]

ஐக்கியதேசியக் கட்சியின் புனர்வாழ்வு அமைச்சரான டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா விரைவில் வன்னி செல்வார் என ஐ.தே.கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க் கட்சியாக இருந்த போது அக்கட்சி எம்.பியான யான டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா சிலதடவைகள் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பெருநிலப் பரப்பிற்கு விஜயம் செய்தவர்.

அங்கு அவர் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்ததுடன் மருத்துவ முகாம்களையும் நடத்தியிருந்தார்.

டாக்டர் ஜெயலத்தின் வன்னி விஜயத்தை முக்கிய தேர்தல் பிரசாரமாகப் பொது ஜன ஐக்கிய முன்னணி கையாண்ட போதும் தென்னிலங்கை மக்கள் அது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை என்பதும் தெரிந்ததே.

இந்நிலையில் புனர்வாழ்வு அமைச்சுப் பொறுப்பேற்றுள்ள டாக்டர் ஜெயலத் விரைவில் வன்னி சென்று விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

# தமிழ்க்கட்சி கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் நாளை தெரிவு

[கொழும்பு]

நான்கு தமிழ்க் கட்சிகளின் சார்பில தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்கள் தம பாராளுமன்ற குழுத்தலைவரைத் தெரிவுசெய்வதற்கு குழுவொன்றை அமைத்துள்ளனா

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று கொழும்பில் கூடி பாராளுமன்றக் குழுத் தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்வது தொடர்பாக ஆராய்ந்து இக் குழு நியமிக்கப்பட்டது.

இக் குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் வீ.ஆனந்த சங்கரி, செயலாளர் இரா.சம்பந்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தி மற்றும் கஜேந்திரகுமார், சிவ

(8ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போனோர் சங்கம்

# யாழ். செயலகம் முன்பாக அடுத்த வாரம் உண்ணா விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் அடுத்த வாரமளவில்யாழ் செயலகம் முன்பாக தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

இம் முடிவு குறித்த தீர்மானம் நேற்று நல்லூரில் இடம் பெற்ற காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தின் போது தமது கோரிக்கைகள் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கிய மகஜர் யாழ் எம்.பி களிடம் கையளிப்பதெனவும் முடிவு செய்துள்ளனர்.

காணாமல் போனவர்கள் தொடர்பில் கொல்லப்பட்டவர்கள் என்று தெரிவித்து அரசினால் 167 பேரின் விபரம்

[8ம் பக்கம் பார்க்க]

# விபத்தில் சிக்கி சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள், விபத்தில் சிக்கி, அறிவிழந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஆறுவயதுச் சிறுமி ஒருவர் நேற்று சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார்.

அல்வாய் வடக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த கோபால கிருஷ்ணன் சஜானா என்ற சிறுமியே உயிரிழந்தவராவர்.

கடந்த 13ந்திகதி இடம் பெற்ற விபத்தில் சிக்கி

(8ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில்

# கான்ஸ்டபிள் கொலை சந்தேக நபர் கைது

(வவுனியா)

வவுனியா கற்குழி என்ற இடத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கற்குழியைச் சேர்ந்த ரமணன் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கொலை செய்யப்பட்டவரின் வீட்டில் கொலையாளியின் காலணி ஒன்று காணப்பட்டதையடுத்து அதன் துணைகொண்டு மோப்ப நாய்கள் கொலையாளியின் வீட்டைக் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட ரமணன், வவுனியா நீதிவான் எம் சிற்றம்பலம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு

[8ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள் ஆரம்பம்

Gr 6 தொடக்கம் O/L, A/L வரையிலான சகல தாரகளுக்குமான English Language & English Literature Classes 15 - 12 - 2001 இல் இருந்து ஆரம்பமாகி நடைபெறுகின்றன தொடர்பு: K. சுப்பிரமணியம் 62, டழம் றோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம். அனுமதிக்கு பெற்றார் வருகை அவசியம் (4074)

### SPOKEN ENGLISH

சுலபமாக அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, கதைக்கப் பயிலதல் மூலமும் ந விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (வார இறுதி மாலை வகுப்புகள்). (4086)


## மாடுகளுக்கு தடுப்பூசி

(ஊர்காவறறுறை)

வேலணை கால்நடை வைத்திய நிலையத்தினால் வேலணை பிரதேச செயலர் பிரிவில் மாடுகளுக்குத் தடுப்பூசி ஏற்றப்பட்டுவருகிறது.

மாடுகளுக்கான தொண்டை அடைப்பான் நோய்க்கே தடுப்பூசி ஏற்றப்படுகிறது

தொடர்ந்து ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவிலும் தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது அந்த வகையில் எதிர்வரும் 18ம திகதி புளியங்கூடல், சுருவில் பகுதிகளில் மாடுகளுக்கு தொண்டையடைப்பான்நோய்க்கான தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது

(உ-75)

## நாவலர் விழா

(யாழ்ப்பாணம)

உடுவில் இந்து இளைஞர் மன்ற நாவலர் விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மன்றத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியா குமார வடிவேல் பிரதம விருந்தினராகவும், யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலைவாணி இராமநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கிறார்கள்.

(வ-4)

## நல்ல மேய்ப்பன்

கொள்ள மாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும எனக்கதிகாரம் உண்டு. அதை மறுபடியும எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவிடத்தில் பெற்றுக் கொண்டேன் என்றார்.

யூதர்கள அவரை அணுகி நீா கிறிஸ்துவானால்எங்களுக்குத் தெளிவாகச் சொல்லும் என்றார்கள இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக அதை உங்களுககுச் சொன்னேன் நீங்கள நம்பவில்லைஎன் பிதாவின் பெயரினால் நான்செய்கிற செயல்களே என்னைக் குறித்துச் சாட்சி பகருகின்றன ஆனாலும் நான் உங்களுக்குச் சொன்னபடியே நீங்கள என் மந்தையின் ஆடுகளாயிராதபடியால் நம்பிக்கையற்றிருக்கிறீர்கள என் ஆடுகள் என்சத்தத்தைச் செவிமடுக்கின்றன நான் அவைகளை அறிந்திருக்கிறேன் அவைகள் என பின்னால் வருகின்றன நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன் அவைகள்ஒரு போதும் கெட்டுப் போவதில்லை ஒருவனும் அவைகளை என்னிடமிருந்து பறித்துக் கொள்வதுமில்லை அவைகளை எனக்கு தந்த என்பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார் அவைகளை என் பிதா விடமிருந்துபறித்துக் கொள்ள எவராலும் இயலாது நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். □

# மக்கள் சேவையிலிருந்து ஈ.பி.டி.பி. என்றும் விலகாது

# நாற்பதுஆயிரம் கள்ள வாக்குகள் போட்டே

# தமிழ்க் கூட்டமைப்பு 6ஆசனங்களை பெற்றது!

## பத்திரிகையாளர் மாநாட்டில் முன்னாள் எம்.பி ஜெகன் விபரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாம் யாழ்ப்பாணத்தை விட்டு ஓடவில்லை எமது இரண்டு நாடாளுமன்ற உறுப்பினா களைபதவிகளைக்கொண்டு மக்களுக்கு ஆற்றக்கூடிய சேவைகளை தொடர்ந்து செய்து கொண்டே இருப்போம்

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான வி குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார். நேற்றைய தினம கட்சியின் யாழ் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இப் பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள மக்களின் ஆதரவு எமக்கு அதிகரித்துச் சென்றிருக்கிறது என்பதைக் கெட்ட தெளிவாகக் காட்டுகின்றது. கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலில் 40 ஆயிரம் வாக்காளர்கள் எமககு வாக்களித்திருந்தனர். ஆனால் இம் முறை நடந்த தேர்தலில் 57 ஆயிரம் வாக்காளர்கள் எமக்கு வாக்களித்திருக்கின்றனர்.

### அதிகப்படியான வாக்குகள் ஈ.பி.டி.பிக்கே

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பில் உள்ள நான்கு கட்சிகளின் வாக்குகளையும் தனித்தனியே ஒப்பிட்டுப் பார்க்கையில் எமக்கே அதிகூடிய வாக்குகள் கிடைத்திருக்கின்றது என்பது வெளிபபடையான உண்மை' இந்த நிலமையில் தமக்கு எதிர்பாராத வெற்றி கிடைக்கப் பெற்ற தாக கூட்டுக்கட்சியினர் கூறி வருகின்றனர். ஆனால் அதற்கும் ஓர் காரணமுண்டு.

### கள்ள வாக்குப் போட்டே ஆறு ஆசனங்கள் பெற்றனர்

தீவுப் பகுதிகளில் வாக்கு மோசடி நடைபெற்று வருவதாக பாசாங்கு காட்டி உள்ளூர், வெளியூர் தேர்தல் கண்காணிப்பாளர்களை அங்கு அனுப்பி வைத்து விட்டுயாழ்ப்பாணத்தில் தாராளமாகக் கள்ள வாக்குகள் போட்டனர் என்பது உலகம் அறிந்த உண்மை. இதற்கு எம்மிடம் போதிய ஆதாரங்கள் உண்டு போலி வாக்காளர் அட்டைகள் தயாரித்தமை தொடர்பான சாட்சியங்கள் உட்பட அவை தொடர்பான படங்களும் எம்மிடம் உள்ளன.

இத்தேர்தலில் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட கள்ள வாக்குகள் போடப்பட்ட நிலையிலேயே தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு யாழ் மாவட்டத்தில் 6ஆசனங்களைக் கைப்பற்றியது.

கள்ள வாக்குகள் போடுவதில் 'யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் முன்னின்று செயறபட்டுள்ளனர். அவர்கள் சயனைட் குப்பிகள், இலக்கத் தகடுகள போன்ற சில பொருட்களைக் காட்டி வாக்காளர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

ஈ.பி.டி.பியின் அரசியல் பலத்தை முடக்க வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கத்திற்காகவே கூட்டமைப்பினால் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் பயன்படுத்தப் பட்டுளளனர்.

### செய்தி ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்தன

கூட்டுக் கட்சியினர் சமயப் பெரியார்கள், ஆசிரியர் சமூகம், பல்கலைக்கழகச் சமூகம் மற்றும் சில பொது மக்களின் ஆசியுடன் தேர்தலில் களமிறங்கின ". தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் ஆசியும் இருப்பதாக தகவல்கள் வெளியாகின. ஆனால் இதில் மர்மம் என்னவென்றால் அன்ரன் பாலசிங்கத்தின் உரையை முழுமையாக வெளியிடாமல் சில செய்தி ஊடகங்கள் இருட்டடிப்புச் செய்தன, ஆனால் இந்த வெளிப்படையான உண்மையையாழ்மக்கள் அறியாதவர்கள் அல்லர் இவ்வாறானசந்தர்ப்பத்திலும் கூட ஈ பி.டிபி மகத்தான வெற்றியை ஈட்டியுள்ளது பல்வேறு பக்கங்களாலும் பலமான சக்திகள் கடுமையாக எதிர்த்த போதிலும் ஈ. பி டி பி தோல்வியடையவில்லை அதுதனது தனித் தன்மையைப் பேணி வருகிறது.

### தேர்தல் குளறுபடிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

பல மோசடிகள் ஆள்மாறாட்டங்கள் தேர்தல் முகவர்களின் நடு நிலையற்ற தன்மை போன்ற காரணங்களினால் ஈ பி டி பியின் இன்னுமொரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தட்டிப் பறிக்கப்பட்டுள்ளது. இதனால் தேர்தலில் இடம்பெற்ற குளறுபடிகள் தொடர்பாக நாம் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம்

இதேவேளை கள்ளவாக்குகள் போடப்படுவதைதடுத்து நிறுத்த வேண்டுமென பொது மக்களைக் கேட்டுக் கொண்டவர்களே கள்ள வாக்குப் போட்டனர் என்பதுயாவரும் வெட்கித் தலை குனியவேண்டிய விடயமாகும்.

### மக்கள் ஏமாற்றப்பட்டனர்

ஆனால் இன்று கூட்டுக் கட்சியினருக்கு வாக்களித்த மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டனர் தேர்தல் முடிந்த கையோடு அவர்கள கொழும்புக்குப் பறந்து விட்டனர். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போமென முழங்கியவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் இல்லை.

### கூட்டமைப்பிற்குள் பிளவு ஏற்பட்டுள்ளது

தவிர தேர்தல் முடிந்த கையோடு கூட்டமைப்புக்குள் பிளவுகள் தலைதூக்கியுள்ளது. கூட்டமைப்பின் அனைத்துக் கட்சிகளினதும் சம்மதமில்லாமல் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் எவ்வாறு இந்தியத் தூதுவரைச் சந்திக்க முடியுமென ரெலோ பிரமுகர் ஈழவேந்தன் கேள்வி கணை தொடுத்துள்ளார்:

அத்துடன் தமிழ் காங்கிரஸ்சின் பொதுச் செயலாளர் குமரகுருபரனும் பல கேள்விக்கணைகளைத் தொடுத்துள்ளார்.

தேர்தலுக்கு முன் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம், விடுதலைப் புலிகள் ஏகபிரதிநிதிகள், உடனடியாக சமாதானப்பேச்சுவார்த்தை, பொருளாதாரத் தடைநீக்கம் என முழங்கியவர்கள் தேர்தலின்பின் அதுபற்றி மூச்சு நானும் விடவில்லை

### புனர்வாழ்வு அமைச்சு எங்கே போனது ?

ஐக்கியதேசிக்கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மகேஸ்வரன்தான் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சைப் பொறுப்பேற்று அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக பிரசார மேடைகளில் முழங்கிவந்தார் ஆனால் இன்று இந்து கலாசார அமைச்சைப் பொறுப் பேற்றிருக்கிறார்.

அவரால் கற்பூரத்தையும் சாம்பிராணியையும் மாத்திரமே கொளுத்த முடியும்.

### எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க முடியவில்லை

தேர்தலுக்குமுன் பொருட்கள் விலையேற்றம், எரிபொருள் தட்டுப்பாடு என ஓலமிட்ட மகேஸ்வரன் தேர்தல் முடிந்து எத்தனைபோ நாட்கள ஓடிவிட்ட நிலையிலும் அவரால் எரிபொருள்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாமல் மௌனமாக இருக்கின்றார்.

அத்துடன் கற்கோவளம் தும்பளை முனை போன்ற பகுதிகளில் மீன்பிடிப்பதற்கான தடைகளும் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு ஈ.பி.டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் குகேந்திரன் தெரிவித்தார் இச்செய்தியாளர் மாநாட்டில் ஈ.பி டி பியின் யாழ் மாவட்டப் பிரதிஅமைப்பாளர் மணிபல்லவராஜன் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் அரியநாயகம், செய்தித் தொடர்பாளர் திவாகர் உட்பட பிரதேச சபைத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டர்.

(கு-5)

மரணமானதாக அறிவிக்கப்பட்ட

# அமெரிக்க விமானிகள் உயிருடன் மீண்டனர்

(வாஷிங்டன்)

இந்து சமுத்திரத்தினுள் கடந்த புதனன்று விபத்துக்குள்ளான வி.18ரக அமெரிக்கா குண்டு வீச்சு விமானத்தில் பலியானவர்கள் என்று தெரிவிக்கப்பட்ட 4விமானிகளும் உயிருடன் மீட்கப்பட்டுளனர்.

விமானம் விபத்துக்குள்ளானதும் மயக்கமடைந்து காயங்களுடன் காணப்பட்ட விமானிகள இறந்திருக்கலாம என்று ஊடகங்கள் கணிப்பிட்டதன் விளைவே இப்பொய்யான தகவலை வெளியிடக்காரணம் என்று அமெரிக்கா அதிகாரிகள தெரிவித்தனர்.

எனினும். விமானம் சேதத்திற்குளளாகியமை குறித்து விமானிகள் எதுவும தெரிவிக்கவில்லை என்றும்அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, ஆப்கானிஸ்தான் மீதான இராணுவ நடவடிக்கையில் அமெரிக்கா விமானம ஒன்று விபத்துக்குள்ளாகியமை இதுவே முதல் தடவையாகும்;

(உ-7)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் றொட்டரக்ட் கழகத்தினரால் நடாத்தப்படும் பாதீனியம் அழிப்புத்தொடர்பான கலந்துரையாடல்ஒன்று இடம்பெறவுள்ளதால் நல்லூர் றோட்டரக்ட் கழக அங்கத்தவர்களையும், கொக்குவில் இந்துக்கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி, புனிதபத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றின் இன்ரறக்ட் கழக தலைவர், செயலாளர் உட்பட ஐந்து உறுப்பினர்களை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அருண்ஸ்ஸ்போட்ஸ் ஸ்பொட் நிறுவனத்திற்குத் தவறாது சமுகமளிக்குமாறு கழகத் தலைவர் கேட்டுள்ளார்:

[ந]

# பன்னாட்டுப் படையை ஆப்கானுக்கு அழைக்க இடைக்காலஅரசுவிருப்பம்

(காபூல்)

பன்னாட்டுப்படைகளை ஆப்கானிஸ்தானிற்கு அழைக்கபுதிய இடைக்கால அரசு ஐ. நா. வைக் கேட்டுள்ளது.

தலிபான் ஆட்சி சரிந்ததையடுத்து ஆப்கான் இடைக்கால வெளியுறவு அமைச்சர், ஐ. நாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் பல நாட்டு வீரர்களைக் கொண்ட இராணுவத்தைத் தாம் ஏற்பதாகவும் தெரிவித்தார்.

இருந்தும், பன்னாட்டுப் படைகளைச் சில கட்டுப்பாடுகளுடன் ஐ. நா சாசனத்தின் 6 வது சரத்தின்படி பணியில் ஈடுபடுத்தப்படுவதை இடைக்கால அரசு விரும்புவதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக எந்த எந்த நாட்டுப் படைகள் எந்த இடத்தில் எவ்வளவு காலம் அமர்த்தப் படுவது என்பது ஆப்கானுக்கு அவ்வப்போது தெரிய வேண்டும் என்று தெரிவிக்கப் படுகிறது.

இக் கடிதம் குறித்து ஐ. நா. பாதுகாப்பு சபையில் விவாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (து)

# ஒரு வருடத்திற்குள் சமாதானம் இல்லையேல் யுத்தம் செய்வதைவிட வேறுவழியே இல்லை!

## சமாதான இசையில் சுருதி பிசகுகிறது!

(கொழும்பு)
எமது அரசாங்கம் உடனடியாக சமாதானப்பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும். அதன் மூலம் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த சகல நல்லெண்ண நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் ஒரு வருடத்திற்குள் முடிவு காண முடியாவிட்டால் யுத்தத்தைத் தொடர்வதைவிட வேறுவழியே இல்லை

இவ்வாறு மீன்பிடித்துறை. கடல் வளங்கள் அமைச்சர் மகிந்த விஜயசேகரா கடந்த வியாழக்கிழமை மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சில் தனது கடமைகளைப் பொறுப்பேற்கும் வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நாடு முழுவதிலும் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கி அவர்கள் சௌரவமாக வாழும் நிலையை உருவாக்குவதன் மூலமே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தனிமைப் படுத்த முடியும்.

தெற்கிலுள்ள தமிழர்களைச் சுதந்திரமாக வாழவிடாமல் நாங்கள் தடைபோடுவதன் மூலம் அவர்களை பிரபாகரனிடம் தள்ளிவிடுகிறோம் எனவே அவர்கள் கௌரவமாக வாழ்வதற்கான உரிமைகளைக் கொடுத்து பிரபாகரனைத் தனிமைப் படுத்தி யுத்தத்தை நிறுத்த வழிகாண வேண்டும்.

எமது ஆட்சியில் யுத்தத்தை நிறுத்திபிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுப்போம். அதன் முதற்கட்டமாகவே பிரதமர் இந்தியா செல்லவுள்ளார்.

நிர்வாகத் திறமையற்ற தலைமைத்துவத்தால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது எனவேதான் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு நாம் ஐ.தே. கட்சியுடன் இணைந்தோம். இன்று திறைசேரியில் பணம் இல்லாத சூனியமான ஒரு நிலையிலே தான் நாம் அரசாங்கத்தைப் பொறுப் பேற்றுள்ளோம். எனவே, அனைத்து அமைச்சுக்களும் அதிகாரிகளும் திறமையுடன் செயற்படுவதன் மூலமே நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்று தெரிவித்தார். (எ)

## வரவேற்பு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழக கலைப்பீட புதுமுக மாணவர்களிற்கானவரவேற்புநிகழ்ச்சி இன்று நடைபெறவுள்ளது. (உ-2)

## 345மிதி வெடிகள் கண்டெடுப்பு

(கொழும்பு)
அளவெட்டி, கிளாலி, அச்செழு, கந்தரோடை ஆகிய பகுதிகளில் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதிக்கிடையில் 345மிதி வெடிகளும் கவசவாகன தாக்குதல் கண்ணிவெடியொன்றும் கண்டெடுக்கப்பட்டதாக ஊடகத் தகவல் நிலையம வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தேர்தல் சட்டங்களைமீறிய 850 பொலிஸார் மீது விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)
பொதுத் தேர்தல்களின் போது பக்கச்சார்பாக நடந்து கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுமார் 850 பொலிஸ் அதிகாரிகள் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களில்பிரதிபொலிஸ்மா அதிபர் ஒருவர்,ஐந்துசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், 2 பொலிஸ்அத்தியட்சகர்கள், 11 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள, 20 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் ஆகியோர் அடங்குவர்.

இவர்களில் 15 பொலிஸ் அதிகாரிகள் குறிப்பாகபொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாக வாக்குத்திணிப்பில் ஈடுபட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. (உ)

## மெய்ப்பாதுகாவலர் மூவர் பொலிஸில் சரண்

(கொழும்பு)
முன்னாள் பிரதியமைச்சர் றெஜிரணதுங்கவின் மெய்ப்பாதுகாவலர்கள் 3 பேர், ஆயுதங்களுடன் கடந்தவியாழனன்று மினுவாங்கொட பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

தேர்தல் காலத்தில் ஹம்பஹா மாவட்டத்தில்இடம் பெற்றவன்முறைகள் தொடர்பாக இவர்கள் மூவரும் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே அவர்கள் மூவரும் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர். (உ-5)

## இந்தியாவுடனான உறவைபலப்படுத்துவதில் புதிய அரசு முழுக்கவனம்

[கொழும்பு]
எமது அயல் நாடு இந்தியாவுடனான உறவைப்பலப்படுத்துவதில்நாம் கூடிய கவனம் செலுத்துவோம் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை மாலை வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சம்பிரதாய பூர்வமாக தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட பின்னர் அங்கு ஊழியர்கள், அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் பேசுகையில் இன்றுள்ள நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுத்து முறையான வழியில் செல்வதற்கு ஆவன செய்யப்படும் இதற்கேற்ற முறையில் வெளிநாட்டுப் பணிகள் முன்னெடுக்கப்படும் என்றார். [உ]

## ஐ. தே. க. எம். பிகளுக்கு பயிற்சிப் பட்டறை

(கொழும்பு)
அடுத்த வாரமளவில் ஐ.தே.க.எம்.பிக்களுக்கு பயிற்சிப் பட்டறையொன்றை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு எம்.பிக்களும் தமது தொகுதியில் உடனடியாக அலுவலகம் ஒன்றைத் திறந்து மக்கள் பணி புரிய வேண்டுமெனவும்இதற்காகக் கண்காணிப்புக் குழுவொன்றைத் தாம் நியமிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (உ)

## பிரதமருடனான சந்திப்பு பயன்மிக்கதாக இருந்தது

### ஈ.பி.டி.பி அறிக்கை

(கொழும்பு)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின்பேரில் செயலாளர்நாயகம் கே.என். டக்ளஸ் தேவானந்தா பிரதமரை நேரில் சென்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்றுக் காலை இடம் பெற்ற இச்சந்திப்பு மிகவும் சுமுகமான முறையில் நடைபெற்றதுடன் மிகவும் பயன் தரக்கூடியதாகவும் இருந்தது என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தகவல் தொடர்பு பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது சம்பந்தமாக ஆலோசனை வெளியிட்டிருந்ததும், இது தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளோடும் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக கூறியிருந்ததும் தெரிந்ததே:

இதற்கமைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் உதவியாளர்கள் எவரும் இன்றி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் இதன் மூலம் எதிர்காலத்திலும் பேச்சுவார்த்தைகள் தொடரக்கூடிய நல்லெண்ணச் சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது.

மேலும் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் வெற்றிகரமாக அமைய செயலாளர் நாயகம் வாழ்த்துத் தெரிவித்துள்ளதுடன் இந்திய விஜயத்தை அடுத்து சந்திப்புக்கள் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

## மண்ணெய் அருந்தியசிறுவன் ஆஸ்பத்திரியில்

(மந்திகை)
பெப்சி போத்தலினுள்ளிருந்த மண்ணெண்ணெயை சோடா என நினைத்து தவறுதலாக அருந்திய சிறுவன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்வாய் வடக்கு முத்துமாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த புஷ்பராசா யுகிந்தன் (வயது 3) என்பவரே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ-23)

## குப்பிவிளக்கு சரிந்து பெண் எரிகாயம்

[மந்திகை]
மேசையிலிருந்து உணவருந்திக் கொண்டிருந்த வேளை அருகிலிருந்த குப்பி விளக்கு சரிந்து விழுந்ததில் பெண்ணொருவர் எரிகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழனன்று கரவெட்டி ஸ்ரீநாரதா வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுப்பிரமணியம் சாந்தினி (வயது-18) என்ற பெண்மணி எரிகாயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-[illegible]]

## மரக்கறிகள் திருட்டு

(கோப்பாய)
கோப்பாய் - இராச வீதிப் பகுதியிலுள்ள தோட்டங்களில் நீண்ட நாட்களின்பின்பின் மரக்கறித் திருட்டுகள் அதிகரித்துள்ளன.

கோவா, வெங்காயம் போன்றவையே இவ்வாறு திருடப்பட்டுவருகின்றது. ((உ-79)

## அகதி முகாம்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்த ஜப்பான் 31 இலட்சம் நிதியுதவி

(கொழும்பு)
கிழக்குமாகாணத்திலுள்ள அகதிகள் முகாம்களின் குடியிருப்பு வசதிகளைத்தரமுயர்த்துவதற்காக ஜப்பானிய அரசாங்கம் 31 இலட்ச ரூபாவை அன்பளிப்பாகவழங்கியுள்ளது.

ஸோவோ என்றழைக்கப்படும் அரசாங்க சார்பற்ற, அகதிகளுக்கு உதவும் சர்வதேச அமைப்பு மூலமாகஇந்த உதவி கிழக்கு மாகாணத்திலுள்ள அகதி முகாங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

வாழைச்சேனைப் பகுதியில் அமைந்துள்ள 5 அகதிகள் முகாம்களில்உள்ள2ஆயிரத்து 200 பேரின் குடியிருப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய, ஜப்பானிய நிறுவனத்தினால் வழங்கப்படும் இந்நிதியை ஸோவோ அமைப்பு பயன்படுத்தவுள்ளதாகவும்,

இதன்மூலம் 324 குடிசைகள் புதுப்பிக்கப்படுவதோடு 60 கழிவறைகளும் அமைக்கப்படவுள்ளதாய்தெரிவிக்கப்படுகிறது. (உ)


### வலம்புரி ஆதரவில்

மூத்த பத்திரிகையாளர் (வீரகேசரி)
சி. செல்லத்துரை அவர்களின்

### ஞாபகார்த்த சிறுவர் பாடல் போட்டி

★ முதலாம் பரிசு 1500
★ இரண்டாம் பரிசு 1000
★ மூன்றாம் பரிசு 500
மற்றும் ஆறுதல் பரிசுகள் 5

- நாட்டின் சமகால சூழலைக் கருப்பொருளாகக் கொண்டு பாடல்கள் புனையப்பட வேண்டும்.
- பாடல்கள் சிறுவர்களின் உடல் உள விருத்திக்கு உதவுவதாக அமைதல் வேண்டும்.
- பாடல்களில் வரும் சொற்கள் சிறுவர்களுக்கு ஏற்ப இலகுவான மொழிநடையில் அமைதல் வேண்டும்
- பாடல்கள் 24 வரிகள் கொண்டதாக அமைதல் வேண்டும்
- பாடல்கள் மொழி பெயர்ப்பாகவோ, தழுவலாகவோ ஏற்கனவே பிரசுரமானதாகவோ இருத்தல் கூடாது
- நாட்டின் எப்பகுதியில் வாழ்பவரும் வயது, பால் வித்தியாசமின்றி போட்டியில் கலந்து கொள்ளலாம்
- தாளின்ஒரு பக்கத்திலேயே பாடல்கள் எழுதப்பட வேண்டும்
- மேற்படி விதிமுறைகளிற்கு அமையாத பாடல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது
- வலம்புரி ஆசிரிய பீடத்தின் நடுவர்களின் தீர்ப்பே முடிவானது
- "ஞாபகார்த்த சிறுவர் பாடல்போட்டி" வலம்புரி இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு 31-12-2001இற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்
- பரிசளிப்பு தைப்பொங்கல் பண்டிகையின் போது வழங்கப்படும்

## ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாக கடமை புரிவோர்

# விவகாரம் பிரதமரின் கவனத்திற்கு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவிய ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும்வகையில் ஒப்பந்த அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டவர்களுக்குநிரந்தர நியமனம் வழங்க வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றினை அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கல்வி மனிதவள அமைச்சர் கருணாசேன கொடிதுவக்கு ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளது.

மேற்படி மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

கல்விசார்நியமனங்களைப் போட்டிப் பரீட்சை மூலம், திறமையானவர்களைக் கொண்டு நியமிப்பதற்கு இடையூறுஏற்படாவண்ணம் இந்த ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர் நியமனம் இடம்பெற்றது;

க.பொ.த(சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்திக்கு மேல் உள்ள இந்த ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்வழங்கி, வடக்கு-கிழக்கு மாகாண ஆங்கிலக் கல்வி அபிவிருத்திக்குஉதவிநல்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (உ)

## ப.நோ.கூ

# சங்கக்கிளையை பழைய இடத்தில்இயங்ககோரிக்கை

(ஊர்காவற்றுறை)

கடந்த 10 வருடங்களுக்கு முன்பு ஊர்காவற்றுறை பருத்தியடைப்பில் இயங்கி வந்த ப.நோ.கூட்டுறவுச்சங்ககிளையினையே மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இயங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது;

இக்கிராமத்தில் அதிகளவு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் அவர்களின் தேவைகளினை நிறைவு செய்வதற்கு வசதியாகவே சங்கக்கிளையினை மீண்டும் திறக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நகரப்பகுதியில் உள்ளபலநோக்கு கூட்டுறவு சங்க கிளையிலேயே மேற்படிகிராமமக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-75)

# இன்ஸ்பெக்டரின் மனைவி வெட்டிக்கொலை

(மாத்தறை)

உடவளவை திமுல் ஹெட்டிய பகுதியில்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரின் மனைவி வெட்டிக்கொலைசெய்யப்பட்டுள்ளார்.

ஆசிரியையாகக் கடமையாற்றும் ஜயதிஸ்ஸ ஒரராசாட்டயாஸ்(வயது-29) என்பரே வீட்டில் நின்ற வேளை, மேற்படி இன்ஸ்பெக்டரின் உறவினர்களால் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது; (உ)

# அரச அலுவலருக்கு தொலைக்கல்விகருத்திட்டம்

(மானிப்பாய்)

நிர்வாக சேவையில் ஈடுபட்டுள்ள அரசாங்க அலுவலர்களை பயிற்றுவிக்கும் பொருட்டுதொலைக்கல்விகருத்திட்ட மொன்றினை அமுல் படுத்துவதற்கு நிர்வாகமாகாணசபைகள், அரசாங்கஉள்ளூராட்சி தென் பகுதி அபிவிருத்தி அமைச்சு நெராட் நிறுவனத்தின்நிதிஉதவியுடன் நடவடிக்கைமேற்கொண்டுள்ளது;

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம், வர்ல்ட்வில் நீடியா லிமிடெட் ஆகியவை இணைந்து அமைச்சுக்கள் திணைக்களங்கள் மாகாண சபைகள் மாவட்ட செயலகங்கள் மற்றும் தெரிவு செய்யப்படும் பிரதேச செயலகங்களில் அமைக்கப்படும்150குழுக் கல்விநிலையங்களைக்கொண்டமைந்த வலையமைப்பொன்றினால் இக்கருத்திட்டம் செயற்படுத்தப்படும்.

இது சம்பந்தமான சுற்றுநிருபமொன்றும்சகலதிணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ-120)

# உள்நாட்டு விமான சேவை விஸ்தரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டு விமானசேவைகள் விஸ்தரிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

விமானநிலையம், விமான சேவை தொடர்பான செயற்பாடுகளை ஆக்கத்திறன் கொண்டவையாக மாற்றியமைப்பதுடன், பொது மக்கள் சௌகரியமாக பயணம் மேற்கொள்ள ஏதுவாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகும், போக்குவரத்து நெடுஞ்சாலை சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் காமினி அத்துக்கொறளை தெரிவித்தார்.

சிவில் நிர்வாக அமைச்சில் தனது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு உரையாற்றிய போது இவர் இதனை தெரிவித்தார். (உ-7)

## பத்திரிகையாளர்

# பயிற்சி நெறி இன்று கோப்பாயில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு கோப்பாய் பிரிவு நடத்தவுள்ள பத்திரிகையாளர் பயிற்சி நெறியின் ஆரம்பவிழா இன்று மு.ப; 10 மணிக்கு யாழ். கிளை கோப்பாய் பிரிவு ஆகியவற்றின் தலைவர் வைத்தியகலாநிதி வை. தியாகராசா தலைமையில் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், பிரதம விருந்தினராக மக்கள்வங்கியின் கன்னாதிட்டிக்கிளை முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசமும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய உதவிக்கல்விப்பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், மகளிர் அபிவிருத்தி நிலையத் தலைவி சரோஜினி சிவசந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளதாக இப்பயிற்சி நெறியின் ஏற்பாட்டாளரும் இ.செ.ச. கோப்பாய் பிரிவு செயலாளருமான மயில்வாகனம் தெரிவித்தார். (உ)

# முத்தமிழ் விழா

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலக கலாசாரப்பேரவையின் முத்தமிழ்விழா இம் மாதம் 22,23ஆந்திகதிகளில்பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-79)

## மரணச் சான்றிதழ் பெறுவதில் மக்கள்

# சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமாவோரின், மரணச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதில் பொது மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது:

மரண விசாரணைகளை மேற்கொள்ளும் சில மரண விசாரணை அதிகாரிகளின் அசமந்தப் போக்கே இதற்குக் காரணம் என சுட்டிக் காட்டப்படுகிறது.

இதேவேளை, பிறப்புப் பதிவிலும் அக்கறையீனங்கள் காரணமாக பல்வேறு வழுக்கள் காணப்படுவதாக பொது மக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (உ- 104)

# எழுவைதீவு மகளிர் எழுச்சி

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவில் உள்ள மகளிரும் பயனடையக்கூடிய வகையில் இலவச தையல் பயிற்சியினை நடத்த வேண்டும் என அப்பகுதி மகளிர்கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வருடம்வடக்கு-கிழக்கு மாகாண கிராமஅபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் நடத்தப்படும் ஒரு வருடகால தையல் மனையியல் பயிற்சிநெறி அனலைதீவில் இடம் பெறுகின்றது. எதிர்வரும்ஆண்டுஇத்தையல் மனையியல் பயிற்சி நெறியினை எழுவைதீவில் நடத்தப்படவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-75)

# இராசி பலன்

16.12.2001
(மார்கழி 1. ஞாயிறு)
துதியை பி இ 3 22வரை
பூராடம் முழுவதும்
ராகுகாலம் 4 52-6 22
சுபநேரம் 9 22-10 22
சித்தம்

**மேடம்**
பிரயாணம், புதியதொழில் சிந்தை, சொத்துக்களால் நன்மை, காரிதாமதம.

**இடபம்**
உறவினர் மனஸ்தாபம், உடல் வியாதி, பிரயாணக்கஷ்டம், காரியதாமதம்;

**மிதுனம்**
நண்பர்கள் உதவி, சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை.

**கடகம்**
மனமகிழ்ச்சி. முயற்சி கைகூடும் [illegible] தொழில் விருத்தி.

**சிங்கம்**
வியாபார நன்மை, காரிய இடையூறு குடும்பக்கவலை, திடீர் நன்மை.

**கன்னி**
உடல் சோர்வு, தொழில் நன்மை, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம்.

**துலாம்**
கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, காரிய நன்மை, குடும்ப மகிழ்ச்சி.

**விருச்சிகம்**
காரிய அலைச்சல், வீண் விவாதம், தனவிரயம், உஷ்ண வியாதி.

**தனுசு**
ஜனவசியம், நல்லமுயற்சி, காரிய அனுகூலம், சயனசுகம்.

**மகரம்**
அமைதிக்குறைவு, தொழில் கஷ்டம், தனவிரயம், முயற்சி தாமதம்.

**கும்பம்**
தனவரவு, காரிய அனுகூலம், கௌரவம், குடும்ப நன்மை.

**மீனம்**
பிறர்உதவி, தொழில் முன்னேற்றம், முயற்சி கைகூடும், சுபநிகழ்வு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.


# அழைப்புக் கட்டளை

இல; 16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றத்தில்

**கந்தையா மகாலிங்கம்,**
11/13, வயிரவ கோவில் வீதி,
அரியாலை மேற்கு யாழ்ப்பாணம்.

வழக்கு இல.மணநீக்கம் - 246

எதிர் — வழக்காளி
**மகாலிங்கம் — பெண் குலபாக்கியம்,**
மாசியப்பிட்டி, — சண்டிலிப்பாய்.
எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/க்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

தனக்கும் எதிராளிக்கும் இடையே 11-2-1987ந் திகதியன்று இடம் பெற்ற விவாகப்பதிவை ரத்துச் செய்து மணநீக்கத் தீர்வை ஒன்றைப் பெறுவதற்காக

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராகவழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு பிராதுக்குஉமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2002 ஆம் ஆண்டு தை மாதம் 03 ஆந் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும் படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்டதேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டுநடாத்தப்பட்டுவிளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும்சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக்குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**து. சிறீமோகன்**
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்.

எம்மால் வரையப்பட்டது
**கனகரத்தினம் அசோசியேட்ஸ்**
வழக்காளியின் சட்டத்தரணி

**குறிப்பு:-** விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிங்கர நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம், பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்
2001 ஆண்டு மார்கழி மாதம் 13 ஆந் நாளாகிய இன்று
(4084)

## இன்று ஒரு தகவல்

### நல்ல செயல்கள் நம்பிக்கையை வளர்க்கும்

ஒரு நிலையத்திலே கண் பார்வை அற்ற ஒரு சிறுவன் தலையிலே உள்ள கூடையில் அப்பிள் பழங்களை வைத்து விற்றுக் கொண்டிருந்தான். அங்கே ரயிலில் செல்வதற்காக மூன்று பேராசிரியர்கள் வந்திருந்தனர். குறிப்பிட்ட ரயில் வந்து தளத்தில் நின்றவுடன் மூவரும் இருப்பதற்கு இடம் பிடிப்பதற்காக ரயிலை நோக்கி ஓடினார்கள்.

அப்போது அப்பிள்பழம் விற்றுக்கொண்டிருந்த பார்வையற்ற சிறுவன் மேல் மோதிக்கொண்டும் ஓடினார்கள். அதனால் அச்சிறுவன் நிலத்திலே விழுந்தது மட்டுமன்றி கூடையில் இருந்த அப்பிள் பழங்களும் சிதறின.

ரயிலில் ஏறும்போது ஒரு பேராசிரியருக்கு சிறுவன்கீழே விழுந்தது மனச்சாட்சியை உறுத்தவே அவர் சென்று சிறுவனை தூக்கி நிறுத்தி சிதறிய பழங்களை கூடையிலே சேகரித்து தலையிலே வைத்துவிட்டு அவனிற்கு குறிப்பிட்ட தொகை பணத்தைக் கொடுத்து நீ இன்று மகிழ்ச்சியாகச் சாப்பிடு என்றார்.

உடனே அச்சிறுவன் நீங்கள் தான் ஆண்டவரா எனக் கேட்டானாம். அப்போது அவனது மனது மகிழ்வு முகத்திலே தெரிந்திருந்தது.

உண்மையில் ஒருவனிடம் இருக்கும் நல்ல பண்புகளும், பிறரிற்கு உதவும் மனப்போக்கும் பிறர் அவன்மீது விசுவாசம் கொள்ள வைக்கின்றது: இச்செயல்கள் அனைத்தும் கடவுளின் செயல்களுக்கு ஒப்பானவை. அதனால்தான் அந்த கண்பார்வையற்ற சிறுவன் நீங்கள் தான் 'ஆண்டவரா' எனக் கேட்கின்றான் எனவே நாம் செய்யும் ஒவ்வொரு நல்ல காரியமும் எம்மீது ஆண்டவரின் அருட்பார்வையை வீசச் செய்யும். நாம் அனைவரும் நாளுக்கொரு நற்செயலைச் செய்து ஆண்டவரின் அன்பிற்கு உட்படுவோம்.

இக்கதையில் இருந்து எமக்குப் புலப்படுவது நற்செயல்களை செய்யும் ஒவ்வொரு தடவையும் நாம் கடவுளாகப் பிறரால் மதிக்கப்படுகின்றோம். □

ம. சுபாஸ்

# எரிபொருள் தட்டுப்பாட்டிற்கு படையினர் தடையே காரணம்

## யாழ். நுகர்வோர் சங்கம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல் ஆகிய எரிபொருள்கள் தாராளமாக உள்ளன. ஆனால் அவற்றை விநியோகம் செய்வதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கவில்லை என்று சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் எமக்குத் தெரிவித்துள்ளனர். இவ்விடயத்தில் எது உண்மையாக இருப்பினும் பாதிக்கப்படுவது பொது மக்களே.

இவ்வாறு யாழ்ப்பாண நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் யாழ். அரசாங்க அதிபருக்கும் வட பிராந்திய இராணுவத்தளபதிக்கும் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் விலை முன்பு ஒருபோதும் இல்லாதவாறு இன்று அதிகரித்துள்ளது. குறிப்பாக எரிபொருள்களுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகின்றது: இதேவேளை மின்சாரம் அடிக்கடி தடைப்பட்டு வருகின்றது: இத்தகைய சூழ்நிலைகளால் இம் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் ப.நோ.கூ. சங்கங்களில்கூட இல்லை. ஆனால் கறுப்புச் சந்தையில் கூடிய விலையில் தாராளமாக அவற்றை வாங்கக்கூடியதாக உள்ளமை எமக்கு வியப்பளிக்கின்றது.

1996 ஆம் ஆண்டு எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பு குறித்து எதிர்ப்பினைத் தெரிவித்துவந்தோம். ஆனால்அதில் இதுவரை எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. அதிகாரிகள் அத்தியாவசிய பொருள்களுக்குத்தட்டுப்பாடு இல்லை என்று கூறுகிறார்கள் அவைகள் உச்ச விலையில் விற்கப்படுவதால் வாங்க முடியாதுள்ளது.

எரிபொருள்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்கீட்டு முறையிலாவது விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (எ)

## வினாக் கொத்து அனுப்பிவைப்பு

(மானிப்பாய்)

வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் கீழ் சகல திணைக்களங்களிலும் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் வடக்கு- கிழக்கு மாகாண சபையினால் 8 பக்கங்களைக் கொண்ட மனிதவளதரவுத் தளவினாக் கொத்து ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ஊழியர்கள் இதனைப் பூரணப்படுத்தி தமது திணைக்களத் தலைவர்களூடாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-120)

## எரிபொருள் விநியோகம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலரினால் வழங்கப்பட்ட எரிபொருள் விநியோக அட்டைக்கு மானிப்பாய் ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிலையத்தில் நேற்று முன் தினம் முதல்சம்பந்தப்பட்டபிரதேச செயலர் பிரிவிலுள்ள வாகனங்களுக்கு எரிபொருள் விநியோகம மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (உ-120)

## மாதாந்த உதவிப்பணம்

(மானிப்பாய்)

வலிதென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில், பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களினதும் மற்றும் காச நோய் தொழுநோய், புற்று நோய் யானைக்கால்நோய்என்பவற்றினால் பாதிக்கப்பட்டவர்களினதும் டிசம்பர் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-120)

## விபத்தில் சிறுமிகாயம்

(மந்திகை)

திடீரென வீதியை கடக்க முற்பட்ட சிறுமி மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளானதில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்தவியாழன்று அல்வாய் ஸ்ரீலங்கா பாடசாலைக்கு அண்மையில் நடைபெற்ற சம்பவத்தில் இதே இடத்தை சேர்ந்த கோபால கிருஷ்ணன் சகாலனா (வயது-6) என்றசிறுமியே காயமடைந்தநிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

## விகாரமாதேவி பூங்கா மாநகரசபை வசம்

(கொழும்பு)

நகர அபிவிருத்தி சபையின் நிறுவகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள கொழும்பு விகாரமாதேவி பூங்காவை மீண்டும் கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு மேயர் ஓமர் காமில் தகவல் தருகையில்; பொ. ஐ மு. அரசு நீதிமன்ற உத்தரவை பயன்படுத்தி விகாரமாதேவி பூங்காவை நகர அபிவிருத்தி அதிகார சபையின்கீழ்கொண்டு வந்தாலும் கடந்த 7 மாதங்களாக எந்தவித அபிவிருத்தி நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினர். (உ-7)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கட்டப்பிராய் இளஞ்சுடர் இளைஞர்கழகத்தின்வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் இன்றுபி.ப2.00மணிக்கு கழகத் தலைவர் சி.வி ஐயகுருராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## இந்தியா மீது தாக்குதல் வரதர் வருத்தம்தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் நாடாளுமன்ற வளவுக்குள் நடைபெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பு மற்றும் பயங்கரவாதிகளின் துப்பாக்கிப் பிரயோகங்கள் காரணமாக 20 இற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்படவும் பலர் பாடுகாயமடையவும் நேர்ந்த நிகழ்ச்சி கேட்டு அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளோம்.

கொடூரமானதும் தீய நோக்கங்கள் கொண்டதுமான இந்த சம்பவத்தை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பாக அதன் தலைவரும், வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான அ. வரதராஜப் பெருமாள் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் இந்த ஆபத்தான நிலைமைகளை முறியடிப்பதில் உலக ஜனநாயக சக்திகள் தமது தேசிய நலன் என்ற வரையறைக்குள் மட்டுமே தொடர்ந்தும் செயற்படுவார்களானால் உலகில் ஜனநாயக விழுமியங்களும் பெறுமானங்களும் பயங்கரவாதத்தால் விழுங்கப்பட்டு நாளடைவில் உலக மக்கள் தாங்கள் யாரால் அடிமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியாமலே அடக்கப்பட்டிருக்கும் நிலையேற்படும். எல்லைகளையும் கடந்து ஒருவருக்கொருவர் துணையாக நின்று அவ்வாறான தொரு சர்வதேச அராஜகம் ஏற்படுவதை முன்னெச்சரிக்கையோடு விரைந்து தடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்திய உபகண்டத்தில் வாழும் மக்கள் அனைவரும் அமைதியுடனும், பாதுகாப்பாகவும் சகோதரத்துவமாகவும்வாழ இந்தியாமேற்கொள்ளும் அனைத்து முன்முயற்சிகளுக்கும் எமதுஒத்துழைப்பை நிச்சயமாக வழங்குவோம் என்று குறிப்பிட்டுள்ளது. (உ)

## அவசரகால சட்டத்தின் கீழ் கைதான இருவர் பிணையில் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கடந்த வருடம் நவம்பர் மாதம் கைது செய்யப்பட்ட இருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுணதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சாமித்தம்பி வேலாயுதம், போரதீவைச்சேர்ந்த ரவிச்சந்திரன் ஆகியோரையே பிணையில் விடுதலை செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (உ-5)

## புன்னாலைக் கட்டுவன் விளை நிலங்களில் கள்வர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக் கட்டுவன் பகுதி தோட்டங்களில் இரவு வேளையில் இடம்பெறும் திருட்டுக்களைத் தடுக்கும் வகையில் விவசாயிகள் தோட்டங்களில் இரவு நேரகாவலில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீண்டகாலம் கஷ்டப்பட்டு தாம் செய்யும் பயிர்களை ஒரே இரவில் திருடர்கள் களவாடிச் செல்வதால் தமது உழைப்பு மற்றும் பணம் அனைத்தும் விரயமாகுவதையிட்டு பாதிக்கப்படும் விவசாயிகள் மிகுந்த மனக்கவலை வெளியிட்டுள்ளனர். (உ-2)

## ஜனாதிபதி சந்திரிகாவை புதியஅரசுடன் இணைந்து செயற்படுமாறு கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு வரையிலாவது புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுமாறு சங்கைக்குரிய மகாநாயக்க தேரர் ஜனாதிபதியிடம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

இனப்பிரச்சினை முழுமையாக தீர்க்கப்படும் வரை இச்சந்தர்ப்பத்தில் நாடுமுக்கியமான கட்சிகளுக்கியமா என்பதை தீர்மானிக்க வேண்டிய அதி அவசர கட்டத்தில் இன்று அரசியல் கட்சிகள் இருக்கின்றன.

இந்த நிலையில், இனப்பிரச்சினைத்தீர்வுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்புக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி சாதகமான பதிலைத் தருமென்று தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-5)

## தேவாலயத்தில் திருட்டு

(மானிப்பாய்)

நவாலி தென்னிந்தியத்திருச்சபை தேவாலய அத்துடன் இணைந்ததுமான இல்லம் ஆகியவை உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதி மிக்க பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

கடந்த புதன் கிழமை நள்ளிரவு வேளை தேவாலயத்தின் தலைவயுக்குரு இல்லத்தின்னலையும் உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள், அங்குவைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கி, பாவனைக்கு பயன்படுத்தப்படும் பற்றி உண்டியலில் இருந்த ஒரு தொகை பணம் மற்றும் குரு இல்லத்திலிருந்த 10 லீற்றர்பெற்றோல் ஒலிபெருக்கி சாதனம் என்பனவற்றைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர். (உ-120)

## சிந்தனைக்கு விருந்து

### பழைமையை நிந்திக்காதவரை வந்திப்போம்

அரங்கியலென் றொன்றிங் கறிஞகம் ஆகி
உரங்கொடுத்து நாடகத்தை ஊக்கும் - சிரங்குனிந்து
வந்திக்கின் றோமதனை வாழ்த்துகின் றோம்பழைமை
நிந்தித் திடாத வரை.

-பழையவன்

# மக்கா சென்று திரும்பிய பேருந்து விபத்துக்குள்ளானதில் 50 பேர் பலி

ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு மக்காவுக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த வாகனமொன்று விபத்துக்குள்ளானதில் 50 பேர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளனர்.

சவுதியில் மக்கா யாத்திரையை முடித்துக் கொண்டு ஜோர்தானின் தென்பகுதியூடாகச் சென்றுகொண்டிருந்த பேருந்து தனது கட்டுப்பாட்டை இழந்து பள்ளத் தாக்கில் வீழ்ந்ததிலேயே இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

இப் பேருந்தில் சென்ற இருவர் மாத்திரம் தெய்வாதீனமாக உயிர் பிழைத்திருப்பதாக தெரியவந்துள்ளது. (உ-5)

# சமாதான முயற்சிக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் ஐரோ. யூனியன் அறிக்கை

(ஜெருசலேம்)

மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பித்து முன்னெடுத்துச் செல்வதற்கு இஸ்ரேல் பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டு ஐரோப்பிய ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இதேவேளை, இவ்விரு நாடுகளுக்கும் இடையில் மேற்கொண்ட சமாதான முயற்யினை அமெரிக்கா கைவிட்டுள்ளதாக ஜோர்தானிய மன்னர் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

இம்முயற்சி கைவிடப்பட்டதால் இருநாடுகளுக்குமிடையே மோதல்கள் மேலும் அதிகரிக்குமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் ஜோர்தானிய அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-7)

# பின்லேடன் தங்கியுள்ள பகுதியை அமெ. விசேட படையணி முற்றுகை

(காபூல்)

ஆப்கானிஸ்தான் டோரா போரா மலைப்பகுதியில் நிலைகொண்டுள்ள ஒஸாமா பின்லேடனும் அவரது அல் கெய்தா அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் அமெரிக்க விசேட படையணியினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழன் முதல் அப்பகுதியில் அமெரிக்காவின் பி 52 ரக போர் விமானங்கள் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதால் அல் கெய்தா அமைப்பு பல சேதங்களைச் சந்தித்ததுடன் நிலைகுலைந்துள்ளதாகவும்

இந்த நிலையிலேயே டோரா போரா மலைக் குகைகளில் ஒளிந்திருக்குமென நம்பப்படும் ஒஸாமா சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஒஸாமா பின்லேடனினதும் அவரது அல்கெய்தா அமைப்பினதும் உறைவிடமென நம்பப்படும் மலைப்பகுதி சுற்றி வளைக்கப்பட்டுள்ளதால் அவர்களது கடைசிக் காலம் நெருங்கிவிட்டதாக அஞ்சப்படுகிறது.

இதேவேளை, தலிபான் அமைப்பின் தலைவரான முல்லா ஒமரை கைது செய்ய ஏதுவான வகையில் தகவல் கொடுப்பவர்களுக்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படுமென அமெரிக்கா அறிவித்துள்ளது. (உ-5)

# தாக்குதல் சம்பவத்துடன் தமக்குதொடர்பில்லையாம்

## மறுக்கிறது லக்ஷறிஇதொய்பா

(இஸ்லாமாபாத்)

இந்திய நாடாளுமன்ற தாக்குதலுக்கும் தங்களுக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று லக்ஷறிஇதொய்பா கூறியுள்ளது.

இஸ்லாமாபாத்தில் அறிக்கை வெளியிட்ட அதன் பிரதிநிதி இ ஹிபார் முகைதீன், புதுடில்லி தாக்குதலில் லக்ஷறி இதொய்பா இத்தாக்குதலில் ஈடுபடவில்லையென்றும் கூறினார்.

இதேவேளை, பாகிஸ்தான் வெளியுறவு அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் பாகிஸ்தான மண் பயங்கரவாதத்துக்கு ஒரு போதும் இடம் கொடுக்காது என்றும் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் ஏற்கனவே பலத்த கண்டனம் தெரிவித்துள்ளதென்றும் தெரிவித்தார். (து)

# விளையாட்டு செய்திகள்

# அத்தபத்துவுடன் மோதி லாரா வைத்தியசாலையில்

(கொழும்பு)

இலங்கை அஸ்கிரிய மைதானத்தில் இலங்கைமேற்கிந்திய தீவுகள் அணி பங்குபற்றும் ஒரு நாள் போட்டி நேற்று நடைபெற்ற போது விளையாடிக்கொண்டிருந்த மேற்கிந்திய தீவுகள் அணி வீரர் லாரா தோள்பட்டை விலகியதன் காரணமாக உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதலில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த மேற்கிந்திய தீவுகள் அணியில் தொடக்க வீரராக களமிறங்கிய லாரா 11 வது ஓவரில் 24 ரன்எடுத்த நிலையில அபாரமாக ஒரு ஓட்டம் பெறுவதற்காக வேகமாக ஓடி வந்தபோது களத்தடுப்பில்ஈடுபட்டிருந்தமாவன் அத்தப்பத்துடன் மோதுண்டார்.

இதனால் லாராவின் தோள்பட்டை விலகியது. உடனடியாக கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உலங்குவானூர்தி மூலம் கொழும்பிற்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

லாரா காயமடைந்துள்ளதனால் இனி நடைபெறும் போட்டிகளில் அவர் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சிறந்த வீரரை இழந்த நிலையில்மேற்கிந்தியதீவுகள அணி தொடரும் போட்டிகளில் விளையாட உள்ளது. (உ-2)

# பைசா கோபுரத்தை பார்வையிட அனுமதி

(ரோம்)

உலக அதிசயங்களில் ஒன்றான இத்தாலியின் 'பைசா' கோபுரத்தைசென்று பார்வையிட நேற்று முதல் மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுளது.

மிகவும் பிரபல்யம் வாய்ந்த இந்தக் கோபுரம்சரியும் அபாயநிலை இருந்ததல் கடந்த 12 வருடங்களாக மூடப்பட்டிருந்தது

ஆயிரத்து 173 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த கோபுரம் 14அடி 9 அங்குலம் சரிவடைந்து விழக் கூடிய நிலையில் காணப்பட்டது.

கட்டடப் பொறியியலாளர்கள் கடந்த 12வருடங்கள் முயற்சி செய்து 15 அங்குலம் செங்குத்தாக அபாயமற்ற நிலையில் இதனை நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

# ராஜஸ்தானில் கைது

(புதுடில்லி)

பாகிஸ்தானின் புலனாய்வுத்துறையான ஐ.எஸ்.ஏயின் உளவாளிகள இருவரை ராஜஸ்தான் மாநிலத்தில் வைத்து இந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த ஒன்றரை வருடகாலமாக மின் அஞ்சல் மூலம் ஐ.எஸ் ஏக்கு தகவல்களை இந்த இருவரும்அனுப்பி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

அவர்களிடமிருந்து வெடிகுண்டுகள், துப்பாக்கிகள், போதைப் பொருட்கள் என்பன கைப் பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதல்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-5)

# உலகப் புகழ்பெற்ற சாதனையாளர் பிரட்மன் பற்றி ஆஸியில் கண்காட்சி

(கன்பெரா)

கிரிக்கெட் உலகின் பிரபல்யமான அவுஸ்திரேலிய வீரர், மறைந்த டொன் பிரட்மன் பற்றிய விபரங்கள் அடங்கிய கண்காட்சி ஒன்று அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் பிரட்மனின் வாழ்க்கைக் குறிப்புக்கள், குடும்பப் படங்கள், சிறுவயது முதல் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் பிற விபரங்கள் இடம்பெற்றுள்ளன.

டெஸ்ட் போட்டிகளில் பிரட்மனின் ஓட்டச் சராசரி 99.6 ஆகும். இது ஒரு உலக சாதனையும், இனி வரும் காலங்களில் முறியடிக்கப்படாததுமாக கருதப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி 25 ஆம் திகதி பிரட்மன் மரணமானமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம் ஜேர்மனில் நிறைவேற்றப்பட்டது

(பேர்லின்)

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்ட மூலம் நேற்று முன்தினம் ஜேர்மன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன்மூலம் பொலிஸாருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டதோடு பயங்கரவாத சந்தேக நபர்களை இலகுவாக நாடு கடத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களின் சுதந்திரத்திற்கு பயங்கரவாதம் அச்சுறுத்தலாக அமையலாம் என்ற காரணத்தினாலேயே இச்சட்ட மூலம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது; எனவும் தெரிய வருகிறது. (உ-7)

# தாக்குதல் நடத்தியது பாக். தீவிரவாதிகளே

(புதுடில்லி)

பாகிஸ்தானிலிருந்து இயங்கிவரும் லக்ஸ்ஷறி இதொய்பா இயக்கந்தான் கடந்தவாரம் நாடாளுமன்றத்தாக்குதலில் ஈடுபட்டதென்றும் அதற்கான ஆதாரங்கள் தங்களிடம் இருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது. (து)

# விதிமுறைகளை மீறும் கிரிக்கெட் வீரர்களுக்கு புதிய வகை தண்டனை

(லண்டன்)

கிரிக்கெட் போட்டிகளின் போது, விதிமுறைகளை மீறும வீரர்களுக்கு புதிய வகையில் தண்டனை வழங்கப்படவுள்ளது. இந்த திட்டத்தை சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் பரிசீலனை செய்து வருகின்றது.

இந்த புதிய திட்டப்படி, விதிகளை மீறும் கால்பந்தாட்ட வீரர்களுக்கு எச்சரிக்கை அட்டை காட்டப்பட்டு தண்டனை வழங்கப்படுவது போன்று, கிரிக்கெட் வீரர்களுக்கும் அவ்வாறு காட்டி தண்டனை வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய சிறிய குற்றம் புரியும் வீரர்களுக்குவெள்ளை நிற அட்டை காண்பிக்கப்பட்டு எச்சரிக்கப்படுவர். மஞ்சள் நிற அட்டை காட்டப்பட்டால் இரண்டுமணி நேரம் ஆட்டத்தில் இருந்து நீக்கப்படுவர். சிவப்பு அட்டை காட்டப்பட்டால்ஆட்டத்தில் பங்கு பற்ற முடியாது வெளியேற்றப்படுவார்.

இந்ததிட்டம் பற்றி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் கொழும்பில் நடைபெறும் ஐ சி சி. கூட்டத்தில் விவாதித்து முடிவு எடுக்கப்படும்.

இதற்கு முன் தண்டனையாக அபராதம், போட்டியிலிருந்து இடை நிறுத்தம் ஆகியனவே ஐ. சி. சி. இனால் வழங்கப்பட்டது.

இத் தண்டனை முறைகளை மாற்ற வேண்டும்என்று இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து உள்ளிட்ட பல நாடுகளின் கிரிக்கெட் சபைகள் ஐ சி.சி.இற்கு வேண்டுகோள் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

# யுத்தத்தை நிறுத்துமாறு இஸ். இடதுசாரிகள்கடிதம்

(ஜெருசலம்)

பலஸ்தீனத்தின் ஹாஸா பகுதிகள் மீது இஸ்ரேலிய யுத்த விமானங்கள் மீண்டும் குண்டுத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளன.

பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தின் அலுவலகங்கள் மற்றும் அரசாங்க கட்டடங்கள் மீது தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீனத்துடனான இராஜீக உறவுகளை இஸ்ரேல் துண்டித்ததையடுத்து இரு நாடுகளுக்குமிடையிலான பதற்றம் அதிகரித்து வருவது தெரிந்ததே.

இந்த நிலையில், பலஸ்தீனத்தின் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் விமானத் தாக்குதல்களை நிறுத்துமாறு கோரி இஸ்ரேலின் இடதுசாரிகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை ஏற்றிருக்கும் பெல்ஜியம் உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தின் 15 உறுப்பு நாடுகளிடமும் இஸ்ரேல்-பலஸ்தீன யுத்தத்திறகு முடிவு கட்டுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர். (உ-5)

# அமெரிக்க விமானங்கள் அகோரத் தாக்குதல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் டோரோ போரா மலைத் தொடர்கள் மீது அமெரிக்க குண்டு வீச்சு விமானங்கள் மீண்டும் நேற்று முன்தினமும் தீவிர தாக்குதல்களை ஆரம்பித்திருக்கின்றன.

ஒஸாமா பின்லேடன் தற்பொழுதும் டோரா போரா பகுதி மலைத் தொடர்களுக்குள் மறைந்திருப்பதாகவும் அதனாலேயே அப்பகுதிகள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

ஒஸாமா பின்லேடன் ஆப்கானிஸ்தானிலிருந்து தப்பி பாகிஸ்தானுக்குள் நுழைந்துள்ளதாக வந்த செய்தியையும் அவர் மறுத்துள்ளார் (உ-4)

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று
குறள்

# வலம்புரி

## காலத்தால் செய்த உதவி

யுத்தத்தின் கொடூரத்தால் உள்வீட்டு அறைக்குள் ஓடுகின்ற கண்ணீரை அந்தத் தலையணையைத் தவிர யாருமே அறிவதில்லை உயிரிழப்பு உடைமை அழிவு, உறவுகளின் தூர தேசப் பிரிவு இப்படி சோகங்களின் பட்டியல நீண்டு செல்கிறது.

இரவல் வீடுகளில் இருந்து படும் துன்பம். நாம் செய்த பாவத்திற்கான மேலதிக கொடுப்பனவாகும் எங்கு பார்த்தாலும் ஏமாற்று வித்தைகள் பொய்யுரைகள் மககள் சேவைக்கென அமைந்த நிறுவனங்களில் ஊர்க்கதை கதைப்பதற்கு ஓவர்ரைம் கொடுக்க வேண்டிய நிலைமை எங்கும் ஆறுதல் இல்லை. சுடும் பனியில் உறைந்து போகின்ற குழந்தைக்கு சூடேற்ற ஆன போர்வையில்லை இப்படியே ஏழைத்தமிழ் மக்களின் வாழ்க்கை நகர்கிறது. பேரின வாதத்திற்கெதிராக தமிழர்களெல்லோரும் ஒன்று திரண்டிருந்தால் இன்று தமிழ்ப் பிரதேசங்கள் உலகின் நிம்மதிக்குரிய இடமாயிருக்கும்.

ஆனால் நான் வாழ என்குடும்பம வாழ என்று நினைத்ததன் விளைவு உலகில் நிம்மதியில்லாத இனமாகத் தமிழினம் மாறிவிட்டது.

இத்தகையதோர் சூழ் நிலையில் கடந்த ஆண்டு யாழ். வைத்தியசாலையில் பிரசவித்த தங்கள் குழந்தையுடன் ஓட்டோவில் சென்ற சமயம் பளையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெற்றோர் உயிரிழந்து விட உயிர்தப்பிய குழந்தையின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு சமாதானத்தின் பால அதீத அக்கறை கொண்டுள்ள தேசமான்ய லலித்கொத்தலாவல மாதாந்தம் நிதி உதவி வழங்க முன் வந்துள்ளார்.

வசதி படைத்த தமிழ் வர்த்தகர்கள் எவருமே அக்குழந்தையின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்காத நிலையில் சிங்கள இனத்தைச் சேர்ந்தலலித் கொத்தலாவல பளைச் சம்பவத்தை தன் சிந்தையிருத்தி உதவி செய்ய முன்வந்திருப்பதை மனித நேயத்தின் பேரால் பாராட்டுவது சாலச் சிறப்புடையது.

யுத்தமேட்டில் பிறந்து 24 மணித்தியாலயத்தில் தன் பெற்றோரைஇழந்து நிற்கும்குழந்தைக்கு அவர் ஆற்றுகின்ற உதவி காலத்தால் செய்த பேருதவியாகும் இது மற்றவர்களுக்கும் ஓர் நல்ல எடுத்துக்காட்டு.

---

பரமபிதா காட்டிய பாதை

# நல்ல மேய்ப்பன் ஆடுகளைக் காப்பதுபோல் நம்பிக்கை கொண்டவரை இயேசு ரட்சிப்பார்



மெய்யாகவே ''மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆட்டுத் தொழுவத்துக்குள் வாசல்வழியாகப் பிரவேசியாமல் வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான், வாசல் வழியாகப் பிரவேசிக்கிறவனோ, ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான். வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான். ஆடுகளும் அவன்சத்தத்துக்குச்செவி கொடுக்கின்றன. அவன் தன் ஆடுகளைப்பெயர் சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக் கொண்டு போகிறான் அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியால் அவனுக்குப் பின் செல்லுகின்றன. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின் செல்லாமல், அவனைவிட்டோடிப்போகின்றன என்றார் இயேசு

### நல்ல மேய்ப்பன்

இந்த உவமையை இயேசு அவருடனே கூடவிருந்த சில யூதப்பரிசேயர்களுக்குச் சொன்னார். அவர்களோ, அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை.

ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி, நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரராகவும் இருக்கிறார்கள். ஆடுகள் அவர்களுக்குச் செவி கொடுக்கவில்லை. நானே வாசல். என்வழியாக ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான் அவன் உள்ளும், புறமும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்: திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகின்றானேயன்றி வேறொன்றிற்கும் வரான். நானோ அவர்களுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப் படவும் வந்தேன். நானே நல்ல மேய்ப்பன். ஆடுகளுக்காக ஜீவன் கொடுக்கின்றவன். மேய்ப்பனாயிராதவனும் ஆடுகள் தனக்குச் சொந்தமில்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான் அப்பொழுது ஓநாய்ஆடுகளை பீறி அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலை செய்கின்றவனாகையால் ஓடிப்போகிறான். ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்; நானே நல்ல மேய்ப்பன். பிதா என்னை அறிந்திருக்கிறது போலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும் நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்: ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்.

இந்தத் தொழுவத்திலுள்ளவைகள் அல்லாமல் வேறு ஆடுகளும் எனக்குண்டு அவைகளையும்நான்கொண்டு வரவேண்டும்; அவைகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாயிருக்கும். நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து கொள்ளும் படிக்கு அதைக் கொடுக்கின்ற படியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடம் இருந்து எடுத்துக்

[2ஆம் பக்கம் பார்க்க]

தொகுப்பு ; மதிவாணர்

---

சோதிட பலன்

# உங்கள் பிறப்பு நட்சத்திரத்திற்குகந்ததான சுபவேளைகளைத் தெரிந்து செயற்படுங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### கார்த்திகை நட்சத்திரம்

பிறப்பு நட்சத்திரம்கார்த்திகையாக உடையவர்களுக்கு பூசம் நட்சத்திரம் நன்மைக்குரிய நட்சத்திரமாகும் இதன் பலன்- தாராபலன் 6 க்கு சாதனம் அதிபதி சந்திரன். வாகனம் ஐம்புகம். அதிபதி பலன் கீர்த்தி, வாகனபலன் சுகம், 1 வது பாதத்தில் பிறந்தவர்களுக்குநாலாம் சந்திரன் மத்திமம (இது அமாவாசைக்குப்பின் 4 வது நாள்), 2, 3, 4 இந்த மூன்று பாதங்களில் பிறந்தவர்களுக்கு, அமாவாசை கழிந்த மூன்றாவது நாள் சிறப்புடையதாகும். (இதுவளர்பிறை) கிழமைகளில் திங்கட்கிழமை எப்போதும் நன்மைக்குரிய நாள், திங்கட்கிழமையில் சித்தயோகம் உதயமாகும், இது எல்லா வழியிலும் சிறப்புடையது. மகரிஷி கூறிய ஆனந்காதி யோகத்தில் பிரஜாபதியோகம் சிறப்பு, இதன் பலன்இஷ்டசித்தி, கௌரி பஞ்சாங்க வேளையில்இரண்டரை நாழிகைக்கு உள்ளாக ஒருமணி நேரம்) அமிர்தவேளையில், சந்திரன் தின ஓரையில் அல்லது பன்னிரண்டரை நாழிகைக்குமேல் பதினைந்து நாழிகைக்குள்ளாக (5.00 மணி நேரம் முதல் 6.00மணி நேரத்துக்குள்) லாபவேளையில் சுக்கிரன் ஓரையில் கட்டடம் கட்டதடைகால்போட தொழில் ஆரம்பம் செய்ய, கிணறு எடுக்கவும், திருமணம் முடிவுசெய்யவும். இன்னும் இதர சுபமுயற்சிகளுக்கும் சிறப்பான காலமாகும், இதே கார்த்திகை நட்சத்திரம் உடையவர்களுக்கு பூசம் நட்சத்திரத்தில் வியாழக்கிழமை வரும் நாள் சுபயோகம் உதயமாகும், எல்லா விதமான சுபமுயற்சிக்கும் உரிய நாள். கௌரி பஞ்சாங்க வேளை இரண்டரை நாழிகைக்குள் (1.00 மணி நேரத்திற்குள) உத்தியோக வேளையில், குரு கால ஓரையிலும் எதைச்செய்தாலும். நன்மையே பலிக்கும். அல்லது பன்னிரண்டரை நாழிகைக்கு மேல் பதினைந்து நாழிகைக்குள், (5.00 முதல் 6.00 மணிக்குள்) லாபவேளையில் சந்திரன் ஓரையில் எதையும் செய்யலாம்.

கார்த்திகை நட்சத்திரகாரர்களுக்குவேதை (ஆகாத நட்சத்திரம்) விசாகம், திருமணம் செய்ய, தொழில் கூட்டுச்சேரவும் பொருந்தாத நட்சத்திரங்கள் -6 (ரச்சு), அவை கார்த்திகை, புனர்பூசம், உத்தரம், விசாகம், உத்தராடம், பூரட்டாதி. அதிர்ஷ்டமலர்: மந்தாரை அனுகூல தெய்வம்- சிவன் அதிர்ஷ்டக் கல் மாணிக்கம், அதிர்ஷ்ட நிறம் சிவப்பு, அதிர்ஷ்ட எண்- 3.

## டாக்டர் எம். பி. ராமன்

(சோதிட வித்தகர்

### ரோகிணி நட்சத்திரம்

ரோகிணி நட்சத்திரத்திற்கு எப்போதும நன்மை செய்யக் கூடிய நட்சத்திரம் ரேவதி. இதன் விவரம தாரா பலன் 6க்கு காரிய சாதனை. அதிபதி சந்திரன். வாகனம ஐபுகம். அதிபதி பலன் புகழ். வாகனப்பலன் சுகவிருத்தி. சந்திரன பலன்- அமாவாசை கழிந்த பதினொன்றாவது நாள் எப்போதும் அனுகூலம. ஆதாயம் தரும நாள. இந்த நாளில் எல்லா சுபகாரியங்கள செய்யவும் பயன்படுத்தலாம். வீடு மனைமுகூர்த்தம செய்யவும் தொழில ஆரம்பம் செய்யவும் நன்மை தரும்நாள். இந்த நாளில் மற்ற சுப ஓரைகள, இதர கிரக அமைப்புகளையும் பார்த்து செயல்படுத்த வேண்டும், வாரநாட்களில் திங்கட்கிழமை சித்தயோகம் வரும் நாள் எல்லா சுபகருமங்களுக்கும் ஏற்ற நாள். மற்றும் கௌரி பஞ்சாங்கவேளையில் இரண்டரை நாழிகைக்குள்ளாக (1மணிநேரம) அமிர்தவேளையில், சந்திரகால ஓரையிலும் மனைமுகூர்த்தம், தொழில் ஆரம்பம் கிரகப் பிரவேசம செய்யவும் நன்மையே பயக்கும்.

ரோகிணிக்கு ரேவதிநட்சத்திரம் வியாழக்கிழமையில் வரும் நாள் சித்தயோகம் உதயமாகும். இந்த நாளை எல்லாவிதமான சுபகருமங்களுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனந்தாதியோகத்தில் மித்திர யோகம் நன்மைக்குரியது. இதன் பலன் ராஜ்ய பரிபாலனம். இதை அரசியல் வாதிகள் தமதுபதவி, தேர்தல் போன்ற முயற்சிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். கௌரி பஞ்சாங்க வேளையில் 1- இரண்டரை நாழிகைக்குள்ளாக (ஒரு மணி நேரம் உத்தியோக வேளையிலும், குரு கால ஓரையிலும் எதையும் செய்யவும், முயற்சிக்கவும்மனத்திருப்தியாக எல்லாம் முடிவு பெறும்.

ரோகிணி நட்சத்திரத்திற்கு ரேவதி நட்சத்திரம் வெள்ளிக்கிழமையில் வரும்நாள் அமிர்த யோகம் வரும். இந்த நாளில் நீங்கள் எல்லாவிதமான சுப காரியங்களிலும் ஈடுபடலாம். கடைக்கால் போட, புது இல்லம் குடிபுக, தொழில் ஆரம்பம் செய்யவும், புதுக் கணக்குப் போடவும் நலம் தரும். ஆனந்தாதியோகத்தில் இதற்கு ஸ்ரீவர்ச்ச யோகம் என்பது பொருள்; இதன் பலன் லக்ஷ்மி லாபம். கௌரி பஞ்சாங்க காலத்தில் நாலு மணிநேரத்திற்கு மேல் நாலே முக்கால் மணிநேரத்திற்குள் அமிர்தவேளையில் குருஓரையிலும் எந்தசுபகாரியத்திலும் ஈடுபட, அல்லது முயற்சி செய்ய சுபமாகும்.

ரோகிணிக்கு வேதை- (ஆகாத நட்சத்திரம்) சுவாதி. திருமணம் செய்ய, தொழில் கூட்டுசேர்க்க, நண்பர்களாக இருக்கக்கூடாதவர்கள் நட்சத்திரங்கள் 6(ரச்சு), அவைகள் ரோகிணி, திருவாதிரை, அத்தம், சுவாதி, திருவோணம், சதயம். அதிர்ஷ்ட மலர்- அல்லி, அனுகூல தெய்வம்-பார்வதி, அதிர்ஷ்டநிறம் -வெள்ளை, அதிர்ஷ்டஎண் -4

(தொடரும்.)

---

## தினசரி தியானம்

## சூரசம்மாரம்

மனதையொரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி எனதறிவை அம்பாக்கி எய்வதினியெக்காலம்.

பத்திரகிரியார்

இறைவா, என்னுள்ளிருக்கும் சிற்றியல்பு என்னும் சூரனைச் சம்மாரம செய்ய நீ துணைபுரிவாயாக.

அசுரனை அழித்தல் என்னும் அரிய செயலை தெய்வம் பல்வேறு வடிவெடுத்துச் செய்திருக்கிறார். நமமுள்ளிருக்கும் கீழ்மையே அசுரன் என உருவகப்படுத்தி இயம்பப்பட்டிருக்கிறது. கீழ்மையோடு கடும்போர் புரிந்து அதை அகற்றவேண்டும்.

-ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# எம்.பிகளாகதெரிவுசெய்யப்பட்டபிக்குகளும் சபாநாயகருக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினராக பௌத்த பிக்குமார் தெரிவு செய்யப்பட்டிருப்பினும், அவர்களும் பாராளுமன்றச் சம்பிரதாயப்படி சபாநாயகருக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்தவேண்டுமென்று பாராளுமன்றச் செயலாளர் நாயகம் தம்பிக்க கித்துல்கொட தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு உள்ளே வரும் போதும் வெளியே செல்லும் போதும் பௌத்த பிக்குமார் உட்பட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டும்.

பாராளுமன்றத்துக்குள் பஞ்சன் அங்கியோடு பிக்குமார் வருவதற்கு எந்தத் தடையுமில்லை என்று அவர் கூறினார்.

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் காலி மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினராக பத்தேகம சமித்த தேரர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

இதேவேளை பௌத்தபிக்குகள் எம் பி பதவி பெற்று பாராளுமன்றம் செல்வது பௌத்த சமயத்துக்கு பெரும் இழுக்கென்று கண்டிமகாநாயக்க தேரர் ணைக்கந்துக் குரிய மடிசே பன்னாசிலதேரர் தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்குகள் பாராளுமன்றம் சென்று நிர்வாகம் நடத்துவதை தடுத்து நிறுத்துமாறு கோரி தேரர் மடிசே ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு கோரிக்கைவிடுக்கப் பட்டுள்ளது. (இ)

யாழ் செயலக

அனுப்பப் பட்டுள்ளது.

இதனை தனித்தனியே இறந்தவர்களின் குடும்பங்களுக்கு கடித மூலம் அறிவிக்க வேண்டுமென்றும் காணாமல் போனோர் தொடர்பில் மிகுதிப் பேர் எங்குள்ளனர் அவர்களின் விபரங்களை தெரியப்படுத்த வேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கோரவுள்ளதாக சங்கத்தினரால் தெரிவிக்கப் படுகிறது. (இ-2)

## மீன்பிடி குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச மீன்பிடிக்குழுக்கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 11-30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (உ-75)

## வவுனியா வைத்தியசாலை பொது வைத்தியசாலையாக மாறும் சித்தார்த்தன்எம்பிநம்பிக்கை

(கொழும்பு)

வவுனியா ஆதார வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாக மாற்றுவதற்கு உரிய சகல நடவடிக்கைகளையும் தான் விரைவில் எடுக்கவுள்ளதாக, வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

புளொட் அமைப்பின் ஆதரவாளர்கள் மத்தியில் தேர்தலில் தனது கட்சி வெற்றியீட்டியதற்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமானவுடனே முதல் வேலையாக, வைத்தியசாலையை தரம் உயர்த்தி, அதன் பணிகளை விரிவடையச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்

இதனை மேற்கொள்ள சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டு பணிகளை முன்னெடுக்கப் போவதாகவும் கூறினார். (இ)

## இடியன் துவக்கிற்கு சிறுவன் பலி

வவுனியா ஐயன்குளம் 14ம் வாய்க்கால் பிட்டத்தில் இடியன் துவக்கு வெடித்ததில் 12 வயது சிறுவன் ஒருவன் பலியானார். (வ)

# தேசிய பாடசாலை ஆசிரியர்கள் இடமாற்றத்திற்குவிண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள தேசியப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உயர் கல்வி அமைச்சு வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2002ஆம் ஆண்டிற்கான இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கும் தேசிய பாடசாலை ஆசிரியர்கள் 31. 12. 2001ல் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள நிரந்தர நியமனத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

மாதிரி விண்ணப்பப் பத்திரங்களுக்கு அமைய விண்ணப்பங்களை தயாரித்துக் கடமையாற்றும் தேசிய பாடசாலை அதிபரின் விருப்புரையுடன் 30. 12. 2001 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக 'செயலாளர், கல்வி உயர் கல்வி அமைச்சு, தேசிய பாடசாலைகள் கிளை, இசுருபாய, பத்தரமுல்ல' என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டுமென்று உயர் கல்வி அமைச்சின் செயலாளர் வைத்தியபாராட்சிமெல் அறிவித்துள்ளார். (வ)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கிடையே நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டி இன்று மாலை 3-00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது

இன்றைய ஆட்டத்தில் நல்லூர்க் கல்விக்கோட்டத்தை எதிர்த்து பருத்தித்துறைக் கல்விக் கோட்டமும் கரவெட்டி கல்விக்கோட்டத்தை எதிர்த்து தெல்லிப்பளைக் கல்விக் கோட்டமும் மோதவுள்ளன. (இ)

## என் அன்பார்ந்த யாழ், குடாநாட்டு மக்களே !

கடந்த தேர்தலில் என்னை வெற்றிபெறச் செய்து பாராளுமன்றம் அனுப்பியமைக்கு மீண்டும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த தேர்தலில் என் வெற்றிக்குத் தோளோடு தோள் நின்று கடுமையாகஉழைத்த என் உயிரிலும் மேலான எனது நண்பர்கள், ஆதரவாளர்கள் எனது வெற்றியினைப் பத்திரிகைகளில் பாராட்டி வாழ்த்துவது எனது வெற்றியின்பால் நீங்கள் கொண்ட மகிழ்ச்சியினை மிகவும தெளிவாக வெளிக்காட்டுகின்றது என்பதில் ஐயமில்லை.

எனினும் நாம் அனைவரும் கடந்த தேர்தலில் எந்த 'அரசியல் கலாசாரம்' யாழ் குடாநாட்டிலிருந்து அறவே நீக்கப்படவேண்டும்என்றுகடுமையாக உழைத்து அந்த இலக்கு எட்டப்பட்ட நிலையில்மீண்டுமஅதே 'அரசியல்கலாசாரம்' யாழ் குடாநாட்டில் தலைதூக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவது நம் அனைவரினதும தலையாய கடமையாகும்.

எனவே என் அன்பிற்கினிய மக்களே! தாங்கள் என்மீது கொண்ட அன்பிற்கும், ஆதரவிற்கும் நான் சிரம் சாய்க்கும் அதே வேளை, நீங்கள் என்னைப் பத்திரிகைகளில் பாராட்டி வாழ்த்துவதற்குப் பதிலாக அதற்கு செலவாகும் பணத்தினை ஏழைகளுக்குக் கொடுத்து அவர்களின் ஒருநேர பசியாற உதவுமாறு மிகவும் தாழ்மையுடன் தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு: பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புவோர் ஒரு தபால் அட்டையில் அதனை குறிப்பிட்டு அனுப்பி வைத்தால் போதுமானதாகும்.

நன்றி

**தி. மகேஸ்வரன்**

இந்து சமய கலாசார அமைச்சர்

[கி-3004]

விபத்தில்

மேற்படி சிறுமி விபத்தில் அறிவிழந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்

முன்னதாக வந்தசெய்தி 5ம் பக்கத்தில் (இ-104)

பட்டிவீரக்கோன்

களிடையே ஏற்படுத்தப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒவ்வொரு கட்சியிலிருந்தும் ஒவ்வொருவர் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படுவர் எனவும், பொ. ஐ. மு பொதுச்செயலாளர் சமர்ப்பித்த தேசியப் பட்டியலை நிராகரிக்கும்படியும் பட்டிவீரக்கோன் கேட்டுள்ளார். (உ)

நத்தார்

விருப்பை வெளிப்படுத்தும் வகையில் ஒரு தலைப் பட்சமாக யுத்தநிறுத்தமொன்றை அறிவித்தனர்

அத்துடன் அதனை மேலும் நான்கு மாதங்களுக்கும் நீடித்துமிருந்தனர்ஆனால்புலிகளின் யுத்த நிறுத்தத்தை அவர்களின் பலவீனம்மென்றுகருதிய சந்திரிகா அரசு பதிலுக்கு யுத்த நிறுத்தம் செய்யாது போரில் ஆர்வம் காட்டியது

அதன் விளைவு போர் மூண்டதுடன் அரசியலில் இருந்து சந்திரிகே அரசு தூக்கிவீசப் பட்டது.

இதே வேளை ரணில் விக்கிரமசிங்கவின் அரசு பாதுகாப்பு அமைச்சையும் வைத்திருப்பதால் அடுத்தவாரம் ரணில் யுத்த நிறுத்த அறிவிப்பை வெளியிடுவாரென்று எதிர் பார்க்கப்படுகிறது. (இ)

ரணில்..

சிங்களவிற்கு ஆதரவுவழங்கத் தயாராக உள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கு ஆதரவு வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விடுத்த வேண்டுகோளைப் பரிசீலனை செய்த இந்த 23 எம்பிக்களும் அதனை ஏற்று ஆதரவு வழங்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

தேசிய நல்லிணக்க அரசை ஆதரிக்கப் போவதில்லை

இது இவ்வாறு இருக்க தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு நேற்றுக் கூடி நீண்ட நேரம் ஆராய்ந்துள்ளது. இதனை அடுத்து சர்வகட்சி அரசாங்கம் ஒன்றையோ, தேசிய அரசாங்கம் ஒன்றையோ ஆதரிக்கப்போவதில்லை என்று தீர்மானித்துள்ளது.

இக்கூட்டம் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா தலைமையில் கூட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் ரணிலின் அரசாங்கத்தில் எந்தவித மான பதவிகளையும் ஏற்பதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் சிலர் தேசிய நல்லிணக்க அரசுபற்றி தெரிவித்திருக்கும் கருத்து தொடர்பாக சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனா கருத்துத்தெரிவிக்கையில் முன்னாள் அமைச்சர்களின் கருத்துக்கள் அவர்களது சொந்தக் கருத்துக்களே தவிர கட்சிகளின்கருத்துக்கள் அல்லஎன்றும் குறிப்பிட்டார்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் இத்தகைய மாறுபட்ட கருத்துக்கள் நிலவும் இச்சந்தர்ப்பத்தில் தேசிய நல்லிணக்க அரசிற்கு ஆதரவு வழங்க ஒரு குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளும்கட்சியின்பக்கம்தாவுவர்என்றும்நம்பப்படுகிறது. (வ)

பாராளுமன்

சக்தி ஆனந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இக் குழுவினர் நாளைக் காலை கூடி பாராளுமன்றக் குழுத்தலைவரைத் தெரிவு செய்வார்கள். [வ]

கான்ஸ்டபிள்

எதிர்வரும் 27ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (வ)

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த
சுகாதார முறைப்படி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விஷேசமாக தயாரிக்கப்பட்டது
சுத்தமான
**வி.எஸ்.பி. நல்லெண்ணெய்**
தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26A மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
கி-1986)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.